www.tamilarangam.net

# தமிழீழ தேசிய விடுதலைப்போராட்டம் 'தடையை' மீறி முன்னேறட்டும்! தமிழீழ ஆதரவு எழுச்சி 'தடையை' உடைத்து வெற்றி பெறட்டும்!

சிறீலங்கா சிங்களப் பேரினவாத அரசின், இனவாத-மதவாத ஒடுக்குமுறைக்கும், நில ஆக்கிரமிப்புக்கும், பொருளாதார சுரண்டலுக்கும், தமிழ்இன அழிப்புக்கும் எதிராக, ***இன சமத்துவம்*** கோரிய தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமைக் கோரிக்கையும், அகிம்சைப் போராட்டங்களும், சிறீலங்கா அரசால் மூர்க்கத்தனமாக நசுக்கப்பட்டது. அத்தடைகளை மீறி தமிழ்மக்களின் சுயநிர்ணய உரிமைப் போராட்டம். ***தனியரசு*** அமைக்கும் தமிழீழ தேசிய விடுதலைப் போராட்டமாக முன்னேறியது. இன்று ***தேசிய இன விடுதலை யுத்தமாக*** வளர்ந்திருக்கிறது. உலகில் இன்று நடைபெறும் போராட்டங்கள் - விடுதலை யுத்தங்களில், தமிழீழப் போராட்டமும் - யுத்தமும் முக்கியமான ஒன்றாக திகழ்கிறது. தமிழீழ தேசிய விடுதலைப் போராட்டத்தை, ஒடுக்கப்படும் தேசங்களும் மக்களும் புறத்தில் ஒரு உந்து சக்தியாக பார்க்கின்றனர்.

## அரசியல் இராணுவ நிலைமை

புலிகள் இயக்கத்தின் விடுதலை யுத்த நடவடிக்கைகள், தமிழீழப் பகுதியில் "ஓயாத அலை" வெற்றியுடன் வன்னிக் கட்டுப்பாட்டுப் பகுதி விரிவாக்கப்பட்டுள்ளது. தமிழீழப் பகுதியில் சிறீலங்காப்படைகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் புலிகளின் இராணுவ நடவடிக்கைகள் தொடர்ந்து நடக்கின்றது. அரசு படைகளின் முன்னேறும் "அக்கினிச் சுவாலை" தாக்குதல்களும், பதிலடித்தாக்குதல்களும் பாரிய இழப்பின்றி புலிகளால் தடுத்து நிறுத்தப்படுகின்றன. மறுபுறம் சிறீலங்காவின் எல்லைக்குள் தலை நகரங்களில் இராணுவ - பொருளாதார நிலைகள். விமான நிலையம் மீது தரைவழி ஊடுருவி நடத்தும் திடீர்த் தற்கொலைத் தாக்குதல்கள் வெற்றியடைந்திருக்கிறது. அரசை நிலைகுலைய வைத்திருக்கின்றது. இவை எல்லாம் விடுதலை யுத்தத்தில் ஒரு வளர்ச்சியை வெளிப்படுத்துகின்றன.

புறநிலையில் புலிகளின் இராணுவ வெற்றிகளை, புரட்சிகர சக்திகள் பேசுவது, எழுதுவது கூட - புலிகளின் இராணுவ மூலோபாயத்துக்கும் புரட்சிகர தேசபக்த சக்திகளின் இராணுவ மூலோபாயத்துக்கும்



இடையில் முரண்பாடு இல்லை எனத் தவறாகப் புரிந்து கொள்ளப்படுகிறது. புலிகள் எதைச் செய்தாலும் எதிர்க்க வேண்டும். என்ற புலிக்காச்சலில் இருந்து விடயங்களை அணுகக்கூடாது என்பதில் நாம் தெளிவாகவுள்ளோம். அதேவேளை புலிகளின் ***முன்னணிப்படை யுத்த முறைக்கும்*** தமிழீழ புரட்சிகர சக்திகளின் ***மக்கள் யுத்த முறைக்கும்*** மூலோபாயரீதியாகப் பாரிய வேறுபாடுள்ளது. தமிழீழ தேசிய விடுதலைப் போராட்டத்தில், புலிகள் ஒரு தீர்மானகரமான அரசியல் இராணுவச் சக்தியாகவுள்ளது. தேசிய விடுதலைப் போராட்டத்தை பலயீனப்படுத்தும் முக்கியமான அரசியல் - இராணுவச் செயற்பாட்டை விமர்சனத்துக்குள்ளாக்குவதுடன், சரியான மாற்றுப் பார்வை, அணுகுமுறை என்ன என்பதையும், முன்வைக்க வேண்டும். அதைப் புரட்சிகர தேசபக்த சக்திகள் முடிந்தளவுக்கு போராட்டத்தில் அமுல்ப்படுத்திக்காட்ட வேண்டும் அப்போதுதான் மக்களும், சர்வதேச ஆதரவாளர்களும் நமது விமர்சனத்தின் நியாயத்தன்மையை புரிந்து கொள்வார்கள், புலிகள் மக்களால் நிர்ப்பந்திக்கப்படுவார்கள். தமது தவறுகளை திருத்தியாக வேண்டிய நிலைக்குத் தள்ளப்படுவார்கள். கற்றுக் கொள்வார்கள்.

சந்திரிகா தலைமையிலான அரசின் ***"அரசியல் தீர்வு, அமைதி, சமாதானம்"***, பற்றிய இனவாத முகமூடிச் சூழ்ச்சியும், ஆக்கிரமிப்பு யுத்த மூர்க்கத்தனங்களும் கூட அம்மணமாக இன்று அம்பலப்பட்டுள்ளது. நோர்வே அரசின் மூன்றாம் தரப்பு சமாதான முயற்சிகள் கூட காலவரையறையின்றி கைவிடப்பட்டுள்ளது.

சிறீலங்கா ஆளும்வர்க்க சக்திகளுக்குள், ஆளும் கட்சிகளுக்குள் ஏற்பட்ட கூட்டணிக் குழிபறிப்புக்கள், அதிகாரக்கைப்பற்றல்களுக்கான மோதல்கள், சந்திரிகா அரசு மீதான நம்பிக்கை இல்லாத்தீர்மானம் வரை சென்றது. சந்திரிகாவின் பாராளுமன்றக்கலைப்பு, பாராளுமன்ற சனநாயகத்தைக் கூட மதிக்காத சந்திரிகாவின் சர்வாதிகாரமுகத்தை உலகுக்கு காட்டியது. அரசு, அரசியல் சாசன நெருக்கடிக்குள் சிக்கித்தவித்தது. எதிர்கட்சியான UNPயும் பாராளுமன்றத்தை போற்றி வழிபடும் அரசியல் சக்திகளும் அரசியல் சாசனத்தை காக்கப் போராடுவதாக வீதிக்கு இறங்கினர்.

***"தேசிய அரசு"*** அமைப்பது என்ற நிலைக்கு சென்று, பின் இறுதியில் சந்திரிகாவும் SLFPயும், திடீர் ஆயுதக்கிளர்ச்சிகள் மூலம் பிரபல்யமான இனவாத இடதுசாரிக் கட்சியான J.V.P. இன் 10 பாராளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவுடன், ஒரு வருட கூட்டணிக்கொள்கையுடன் சிறீலங்காப் பாராளுமன்றம் மீண்டும் இயங்கத் தொடங்கியுள்ளது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இனப்பிரச்சனையை தீர்க்க. அரசியல் சாசன மாற்றங்களைச் செய்ய, பாராளுமன்றத்தின் பெரும்பான்மை அனுமதிக்காதபோது, அரசியல் சாசனத்தை திருத்த மக்களிடம் நேரடியாகச் செல்வேன் என முழங்கிய சந்திரிகா. இன்று அரசியல் **சாசனத்தை திருத்தக் கூடாது, புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தக்கூடாது.** இன்னும் சில JVP இன் நிபந்தனைகளுக்கு அடிபணிந்து ஆட்சி அதிகாரத்தை தக்கவைத்திருக்கிறார். ஆட்சி அதிகாரத்தை கைப்பற்றவும், தக்கவைக்கவும் இந்த அரசியல் கட்சிகளுக்கு ***இனவாதம், மதவாதம் தான் ஒரே ஆயுதம்*** என்பதை உள்நாட்டு மக்களும், உலக மக்களும் மீண்டும் கண்டு கொண்டுள்ளனர்.

தமிழீழ தேசிய விடுதலைப் போராட்டத்தை அரசியல் ரீதியாக பலவீனப்படுத்த மக்கள் தொகை கணக்கு எடுப்பு என்ற ஆயுதத்தையும், புலிகளின் யுத்த நடவடிக்கைகளை நசுக்க இரசாயண, உயிரியல் ஆயுதங்களையும் சிறீலங்கா அரசு பயன்படுத்தத் தொடங்கிவிட்டது. சிறீலங்கா அரசு நேரடியாகவும், இந்திய அரசும், உலக ஏகாதிபத்தியங்களும், மறைமுகமாகவும் கூட்டுச் சேர்ந்து தமிழீழ தேசிய விடுதலைப் போரை அழிக்க, புலிகளை நசுக்க முயல்கின்றன. ***இலங்கையின் இறையாண்மை பிரதேச ஒற்றுமை, அதற்குள் தமிழர்களுக்கு நீதி, நியாயம்,*** பேச அரசியல் உரிமை கிடைக்கவேண்டும் என உலக அரசுகள் பேசுகின்றன. தமிழீழ மக்களின் சுயநிர்ணய உரிமை, தனியரசு பற்றி அதற்கான ஆதரவு குறித்து உலகில் எந்த நாடும் வெளிப்படையாகப் பேசவில்லை. அதுமட்டுமல்ல தமிழீழ மக்கள் மத்தியிலுள்ள சமரச சக்திகளை மத, சாதி, பிரதேச வேறுபாடின்றி துரோக சக்திகளாக மாற்றி தங்கள் பக்கம் வென்றெடுத்துள்ளன. நடுநிலைச் சக்திகளை - சனநாயக சக்திகளை, சமரச சக்திகளாக மாற்றுவதில் அரசுசரா நிறுவனங்களை (NGO) புதிய புதிய கோணங்களில் உருவாக்கி முனைப்புடன் செயற்படுத்துகின்றன. இவற்றில் குறிப்பிட்டளவுக்கு எதிரிகள் வெற்றியும் பெற்று வருகிறார்கள்.

## சர்வதேச நிலைமை

தென்னாப்பிரிக்காவின் டர்பன் (Durbon) நகரில் மிக அண்மையில் அய்நாசபை (UIN) நடத்திய, இனவாதத்துக்கு எதிரான உலக மாநாட்டில் *அனைத்து நிலைகளிலும் இனவாதத்தின் தாக்கம் பற்றி ஆராயப்பட்டது.* இஸ்ரேலின் இனவாத முகம் அம்பலப்படுத்தப்பட்டளவு, சிறீலங்கா அரசின் இனவாத முகத்தைப் பற்றிப் பேசப்படவில்லை. பாலஸ்தீனப் போராளி இயக்கங்கள் அந்த மாநாட்டையும், மாநாடு நடந்த பகுதிகளையும், கென்யா போன்ற நாடுகளிலும் இஸ்ரேலின் இனவாத ஆக்கிரமிப்பு முகத்தை, பாலஸ்தீன மக்களின் போராட்டத்துக்கான ஆதரவை வென்றெடுக்க INGOக்களின் எல்லைகளையும் தாண்டிச் செயற்பட்டனர்.

ஆனால் புலிகள் தங்களின் ஏகபோகத்தைதான் அங்கும் நிலைநாட்டி குறிப்பிடும் அளவுக்கு செயற்பட்டனர். வெளிநாடுகளில் இலட்சக்கணக்கான புலம் பெயர்ந்த தமிழர்கள் இருக்கின்ற போதும், இத்தகைய மாநாடுகளை, பொது எதிரியை அம்பலப்படுத்துவதற்கான மேடைகளாக பயன்படுத்துவதில் கூட சுதந்திரமாக செயற்பட முன்வருவதில்லை. புலிகள் இயக்கம் இத்தகைய செயற்பாடுகளை ஊக்குவிப்பதில்லை. மாறாக தனது ஏகபோகச் சக்தியின் எல்லைக்குள் நின்று செயற்பட்டது. பாலஸ்தீன தேசிய விடுதலை இயக்கங்கள் டர்பன் மாநாட்டை ஒட்டி வெளிப்படுத்திய பலமுனைமுன் முயற்சிகளை தமிழீழ அரசியல் சக்திகள் கவனிக்க வேண்டும். கற்றுக் கொள்ளவேண்டும். அமெரிக்காவும், இஸ்ரேலும் மாநாட்டிலிருந்து வெளியேறும் அளவுக்கு நிலமையை சாதமாகப் பயன்படுத்தினர்.

***சாதிய வேறுபாடும், அடக்குமுறையும் கூட, இனவாதமே*** என்ற அளவுக்கு பிரச்சாரமும் கருத்து உருவாக்கங்களும் நடைபெற்றன. இதை தீர்மானமாக நிறைவேற்ற விடாது தடுப்பதில் இந்தியரசு வெற்றி பெற்றது. தேசிய விடுதலைப் போராட்டத்தில் ஒடுக்கப்பட்ட சாதிமக்களின் சம உரிமைக்கான சனநாயகப் போராட்டத்தையும் இணைத்து அய்க்கியப்படுத்தி முன்னேடுக்கும் அரசியல் கண்ணோட்டம் இல்லாத, தேசிய விடுதலை இயக்கங்களால், கறுப்பு இனமக்களை தங்களிலும் இழிவானவர்களாக (கறுவல்களாக) கருதுகின்ற நடத்துகின்ற (மலையக மக்களைக்கூட அப்படித்தான் நடத்துகின்றார்கள்) தமிழ் இனப்பெருமிதச் சிந்தனை கொண்ட அரசியல் சக்திகளால் இத்தகைய சர்வதேச மாநாடுகளில் உணர்வு பூர்வமாக பங்களிக்க முடியவில்லை. தங்களுக்குத் தேவையானதை பயன்படுத்திக் கொள்வது என்ற வட்டத்துக்குள் முடங்கிக் கொள்கின்றனர், புரட்சிகர சக்திகளால்தான் உலக சகோதரத்துவத்தின் அடிப்படையில் செயலாற்ற முடியும் என்பது மீண்டும் மீண்டும் நிரூபிக்கப்படுகிறது.

## ஆப்கான் மீது அமெரிக்கப்போர் தரும் பாடம்

தமிழீழ விடுதலைப் போராட்டத்தை - விடுதலை யுத்தத்தை சிறீலங்கா அரசால் மட்டும் எதிர் கொள்ள முடியாது. தேசிய விடுதலைப் போராட்டத்தின் உலக எதிரிகள், அனைவரும் நெருக்கமாக கூட்டாக செயற்படும் அளவுக்கு எதிரிகள் தள்ளப்பட்டிருப்பது போராட்டத்தின்

www.tamilarangam.net

வளர்ச்சியின் வெளிப்பாடே. உள்நாட்டில் ஒடுக்கப்பட்ட தேசங்களின், சுரண்டப்படுகின்ற மக்களின் போராட்டம் - உள்நாட்டு யுத்தம் நடந்து கொண்டிருக்கும் வேளையில், உள்நாட்டு எதிரியின் இராணுவ - பொருளாதார நிலைகள் மீது தரையிலும்- வானிலும் ஊடுருவி நடத்தும் திடீர்த்தாக்குதல்களுக்கும். ஆக்கிரமிப்பு யுத்தம் நடத்தும் அன்னிய நாட்டின் மீது அவ்வாறு தாக்குதல்கள் நடத்துவதற்கும், ஒரு நாட்டில் நாடு தழுவியளவில் மக்கள் போராட்டம், உள்நாட்டு யுத்தம் நடக்காத நிலையில் அரசின் பொருளாதார - இராணுவ நிலைகள் மீது நடத்தப்படும் திடீர்த்தாக்குதல்களும் அதில் ஏற்படும் மனித இழப்புகளும் சர்வதேச சமூகத்தின் பார்வையில் வேறுபாட்டை வெளிப்படுத்துகிறது.

புலிகள் இயக்கம் சிறீலங்காத் தலைநகரில் ***விமான நிலையம் மீது*** நடத்திய வெற்றிகண்ட அண்மைய தாக்குதலும், அமெரிக்காவில் இராணுவ தலைமையகமான ***பெண்டகன்*** மற்றும் (WTC) ***உலக வர்த்தக மையம் மீது*** நடந்த விமானத் திடீர் தாக்குதல்களையும், அரசுகளும், அரசு சார்பு தொடர்புச் சாதனங்களும், உலக பயங்கரவாதம் தீவிரவாதம் என ஒரே குரலில் ஓங்கி ஒலிக்கின்றன, தொடர்பு சாதன பலத்தைப் பயன்படுத்தி தாக்குதலில் ஏற்பட்ட மனித அழிவுகளை, அதற்கான அனுதாப நடவடிக்கைகளை திரும்பத் திரும்ப ஒளி பரப்புவதன் மூலம் (அமெரிக்காவும், அய்நாசபையும் விதித்துள்ள பொருளாதார, மருந்து, உணவுத் தடைகளால், ஈராக்கில் 5 இலட்சம் குழந்தைகள் இறந்துள்ளனர்). தங்களின் அரசு பயங்கரவாதத்தை அவர்கள் நடத்திய, தினம் தினம் நடத்திவரும் கோரக்கொலைகளை பசி - பட்டினிச் சாவுகளை உலகமக்களின் கண்களில் இருந்து மறைக்க முயல்கின்றன.

விமான நிலையம் தாக்கப்பட்டபோது சிறீலங்கா அரசு, உடனடியாக, பதிலடியாக புலிகளின் நிலைகள் மீது தாக்குதல் நடத்தியது. அமெரிக்க அரசு தாக்குதலுக்கு காரணமான பின்லேடன் தங்கியிருக்கும் ஆப்கானிஸ்தான் மீது பதிலடித் தாக்குதல் நடத்தியது. இவ்விரண்டு விதமான திடீர்தாக்குதல்களையும் பதிலடித்தாக்குதலையும் அதன் அழிவுகளையும் உலகமக்கள் (உலக தொடர்புச் சாதனங்கள் அல்ல) பார்த்தவிதம் அனுகியவிதம் வேறுபாடானது.

அமெரிக்கா, பின்லேடனின் தனிநபர் பயங்கரவாத நடவடிக்கைகளை காட்டி, இது முசுலீம் தீவிரவாதம், பயங்கரவாதம் என திட்டமிட்டு பிரச்சாரப்படுத்தி வருகிறது. பாலஸ்தீனம் முதல் காசுமீர்வரை நடந்துவரும் முசுலீம் மத மக்களின் தேசிய விடுதலைப் போராட்டங்களை, பயங்கவாதப் போராட்டங்களாக சித்தரித்து, ஏகாதிபத்திய உலக மயமாக்கலுக்கு தடையான தேசிய விடுதலைப் போராட்டங்களை அழித்தொழிக்க முயல்கின்றனது. உலக அரசு பயங்கரவாதம், பின்லேடனின் இருப்பிடத்தை காட்டி ஆப்கான் மீது போர் தொடுப்பதற்கான சர்வதேச முயற்சியில் அமெரிக்கா தயாராகி வருகிறது.



இந்தியா, இஸ்ரேல், அமெரிக்கா மூன்றும், பாகிஸ்தான்-ஆப்கானில் உள்ள போராளிகளின் பயிற்சி முகாம்கள் பற்றிய உளவுத்துறைத் தகவல்களை பரிமாறியுள்ளன. 1-9-91 இல் ஈராக் மீது அமெரிக்காவும் பிரிட்டனும் இணைந்து நடத்திய ஆக்கிரமிப்பு யுத்தத்துக்கு செய்யப்பட்ட அரசியல் இராணுவ தயாரிப்புக்கள் போல், 2001இல் ஆப்கான் மேலான அமெரிக்காவின் ஆக்கிரமிப்பு யுத்தத்துக்கு ஆன அரசியல்த் தயாரிப்புக்கள் நடந்து வருகின்றன. இப்பிரசுரம் வெளிவரும்போது ஆக்கிரமிப்பு போர் தொடங்கியிருக்கவும் கூடும். செச்சினிய தேசிய விடுதலைப் போராட்டம் ரசியாவை உலுக்கிக் கொண்டிருந்த போது, கென்யாவிலும், தான் சானியாவிலும் அமெரிக்கத் தூதரகங்கள் தாக்கப்பட்ட போதும், பின்லேடனைக் காரணம் காட்டி நைரோபி மீது, ஆப்கான் மீது 98இல் அமெரிக்கா ஏவுகனைத் தாக்குதல் நடத்தியது. அமெரிக்காவும், ரசியாவும் முசுலீம் தீவிரவாதிகளின் பயிற்சித் தளங்களையும், பின்லேடனையும் அழிப்பதற்காக ஒரு கூட்டு இராணுவ நடவடிக்கையில் இறங்கத் தயாராகி வந்தனர். அமெரிக்காவும், ரசியாவும உலக மேல் நிலை ஏகாதிபத்தியங்களாக போட்டி போட்டுக் கொண்டிருந்தபோது ஆப்கானில் பொம்மை ஆட்சிகளை நிறுவுவதற்கான தொடங்கப்பட்ட அரசு பயங்கரவாதச் சூழ்ச்சிகள், 23 ஆண்டு உள்நாட்டு யுத்தம் இன்றுவரை தொடர்கிறது. ஆசியாவிலேயே அதிகளவான அகதிகளை உற்பத்தி செய்து கொண்ட நாடு ஆப்கான், இப்போது வெளிநாட்டுத் தூதரக அதிகாரிகள், அய்நாசபை (UN) அதிகாரிகள், NGO தலைவர்கள், பண முதலைகள் நாட்டைவிட்டு வெளியேறுகின்றனர். ஆனால் ஆப்கானின் அப்பாவி மக்கள் கதி?

ஆப்கான் மீது போர் தொடுப்பதற்கு காத்திருந்த அமெரிக்காவுக்கு; அமெரிக்காவில் நடந்த திடீர் விமானத்தாக்குதல் ஆதாரமான ஒரு துரும்பாகி விட்டது.

காசுமீர் மக்களின் தேசிய விடுதலைப் போராட்டத்தைப் பயன்படுத்தி, தெற்காசியாவில் எல்லையுத்தம் - ஊடுருவல் மோதல் நடத்திக் கொண்டிருந்த பாகிஸ்தானும்-இந்தியாவும், அமெரிக்காவுடன் கூட்டுச் சேர்ந்து உலக தீவிரவாதத்தை - பயங்கரவாதத்தை நசுக்க போட்டி போடுகின்றன. அமெரிக்காவுக்கு, இந்துமா சமுத்திரத்தில் இந்தியச் சந்தைதான் இப்போது அவசியம் என்பதால் இந்தியக்கூட்டுக்கு

www.tamilarangam.net

முன்னுரிமையளிக்கிறது. இந்திய விமானத்தை, நேபாளத்திலிருந்து கடத்தி ஆப்கானின் கண்டகாரில் வைத்து முசுலீம் போராளிகளை இந்திய சிறைகளிலிருந்து மீட்க உதவிய, காசுமீர் போராளிகளுக்கு உதவியும் ஊக்கமும் கொடுக்கும் தாலிபான்களுக்கும் - பாகிஸ்தானுக்கும் பாடம் புகட்ட காத்திருந்திருந்த இந்திய அரசும் ஆப்கான் மீதான அமெரிக்காவின் போரில் ஈடுபடும் ஆர்வமும் அக்கறையும் வெளிப்படுத்திவருகிறது.

*அரசு பயங்கவாதமே,* தனிநபர் பயங்கவாதத்தினை உருவாக்கிறது. தனிநபர் பயங்கரவாத நடவடிக்கைகள் மூலம் அரசு பயங்கரவாதத்தை தோற்கடிக்க முடியாது. ***அரசு பயங்கரவாதத்தை தோற்கடிப்பதற்கான ஒரேவழி*** நீண்ட கால மக்கள் யுத்த பாதையும், மக்களின் ஆயுதம் ஏந்திய புரட்சியும் தான். தமிழீழப் போராளிகள் பின்பற்ற வேண்டிய மார்க்கமும் இதுதான்.

## போராட்டத்தின் எதிர்காலம்

போராட்டமும் - யுத்தமும் - சமாதானப் பேச்சுக்களும் தொடர்ந்து நடந்து கொண்டிருக்கிறது. இதனால் போராட்டத்தின் அகத்திலும் - புறத்திலும் பல மாற்றங்கள் உருவாகிவருகின்றன. போராட்ட யுத்த அரங்கினுள் செயற்படாத தமிழ் அரசியல் சக்திகளும், போராட்டகளத்துக்கு வெளியே நிற்கின்ற தமிழ் மக்களும், தமிழ் ஆதரவுச் சக்திகளும், அவர்கள் விரும்புகின்ற மாதிரியான போராட்டவளர்ச்சிப் போக்குகள், பண்புகள் போராட்டத்திலும், புலிகள் இயக்கத்திடமும் இல்லாமல் இருப்பது உண்மைதான். ஆனால் போராட்டத்திலும், போராட்டத்தை முன்னேடுத்துக் கொண்டிருக்கும் புலிகள் உள்ளிட்ட அரசியல் சக்திகள் மத்தியிலும் வளர்ச்சிகளும், மாற்றங்களும் நடந்து கொண்டிருப்பதை நாங்கள் கவனித்தாக வேண்டும். போராட்டமும், யுத்தமும் 1983 இன், 87 இன், 91 இன், 95 இன் நிலமை போல் இன்று இல்லை ஒவ்வொரு கட்டத்திலும் அது தனக்கே உரித்தான மாற்றங்கள் வளர்ச்சிகளுடன் முன்னேறிக் கொண்டிருக்கிறது. இயங்கிவருகிறது.

தமிழீழ தேசிய விடுதலையை இலட்சியமாகக் கொண்டு சிறீலங்கா அரசை எதிர்த்து தொடங்கிய போராட்டம் - யுத்தம் இந்திய அரசின் எல்லை கடந்த அரச பயங்கரவாத ஊக்குவிப்புக்களையும் (காசுமீர் மக்களின் தேசிய விடுதலைப் போராட்டத்தை பாகிஸ்தான் அரசின் எல்லை கடந்த பயங்கரவாதமாக இன்று இந்தியரசு பேசுகிறது) மீறி தமிழீழ தேசிய விடுதலைப் போராட்டம் வளர்ந்தபோது, திம்புப் பேச்சை போராளிகள் நிராகரித்தவேளையில், இந்திய அரசு, சிறீலங்கா அரசுடன் கூட்டுச்சேர்ந்து 87இல் ஒப்பந்தம் போட்டது. நேரடியாக ஆக்கிரமிப்பு யுத்தத்தில் இறங்கியது. சிறீலங்கா அரசுக்கு எதிராகப் ***பல போராளி இயக்கங்கள் நடத்திய போராட்டம் - யுத்தம்,*** 87இன்பின் ஒப்பந்தத்தில் சமரசப்பட்டு, தேசிய விடுதலை அரசியலை கைவிட்டு மற்றய இயக்கத்தலைமைகள், துரோக அரசியல் நிலைப்பாட்டை எடுத்தன.

சக இயக்கங்கள் மேலான புலிகளின் அழித்தொழிப்பும், தடைவிதிப்பும் தான். மற்றய இயக்கத்தலைமைகள் தேசிய விடுதலை அரசியலை கைவிட்டு எதிரிகளுடன் கூட்டுச்சேர்ந்ததற்கு பிரதான ***காரணம் என்ற வாதத்தை*** நாங்கள் ஏற்றுக் கொள்வதில்லை, அதேபோல் மற்றய இயக்கத் தலைமைகள் துரோக சக்திகள் என்பதால் தான், புலிகள் முன்கூட்டியே அழித்தொழித்தனர், தடைசெய்தனர் என்ற புலிகளின் ***ஏகபோக அரசியல் இராணுவ வாதத்தையும்*** நாம் ஏற்றுக் கொள்ளமுடியாது.

இந்திய ஆக்கிரமிப்பு எதிர்ப்பு யுத்தத்தில் தொடங்கி இன்றுவரை புலிகலின் இயக்கமே யுத்தத்தை தலைமைதாங்கி நடத்திவருவதால், ***தமிழீழ தேசிய விடுதலையுத்தம், புலிகளின் யுத்தமாக, போராட்டமாக*** பார்க்கப்படுகிறது.

1983 முதல் சர்வதேசளவில் நடந்து வந்த தமிழீழ ஆதரவுப் போராட்டங்கள் எழுச்சிகள், மாநாடுகள் எல்லாம், புலிகள் இயக்க ஆதரவு என்ற எல்லைக்குள் குறுக்கப்பட்டுவிட்டது. உள்நாட்டில் போராட்டக்களத்தில் சிறீலங்கா அரசுக்கு எதிராகவும், தமிழீழ தேசிய விடுதலையிலும் உறுதியாக நிற்க்கின்ற தமிழீழ புரட்சிகர தேசபக்த சக்திகளையும் கூட, அழிக்கின்ற தடைசெய்கின்ற புலிகளின் ஏகபோக ஏதேச்சதிகார அரசியல் இராணுவச் செயற்பாடுகள், வெளிநாடுகளிலும் அப்படியே பிரதிபலிக்கிறது.

வெளிநாடுகளில் சிறீலங்கா அரசின் இன ஒடுக்குமுறை யுத்தத்துக்கு எதிரான போராட்டங்களும், தமிழீழ மக்களுக்கு ஆதரவான எழுச்சிகளும் கூட, புலிகளாலும், புலிகளால் அங்கீகரிக்கப்பட்ட ஆதாவாளர்களாலும் நடத்தப்படும் போராட்டங்களாக எழுச்சிகளாக மட்டும் மாற்றப்பட்டுள்ளது.

தமிழ் மக்களின் தேசிய விடுதலைப் போராட்டமும், புலிகள் இயக்கமும், சிலநாடுகளின் ***"தடை"*** விதிப்புக்களையும் மீறி வளர்ந்து நிற்கிறது. எதிரிகளின் இத்தடைகளுடன், புலிகளின் ***"தடை," "அழித் தொழிப்பையும்"*** கூட மீறி தமிழீழ புரட்சிகர தேசப்பக்த சக்திகள் போராட்டத்தில் ஊன்றிநின்று போராடவேண்டியுள்ளது, பொது எதிரிகளின், தமிழீழ தேசியவிடுதலை அரசியல் மீதான -


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சக்திகள்மேலான *தடைவிதிப்பையும்,* புலிகளின் ஏகபோக அரசியல் இராணுவ செயற்பாடுகளுக்கான 'தடை' விதிப்பையும் வெறுபடுத்தி நாம் புரிந்து கொள்வதுடன், வேறுபடுத்தி அனுகவேண்டிய பொறுப்பு நமக்குள்ளது. பொது எதிரிகளை தோற்கடிப்பதே நமது பிரதான உடனடிஇலட்சியம். பொது எதிரிகளுக்கு எதிரான புலிகள் உள்ளிட்ட அனைத்து தமிழ்த் தேசிய விடுதலை சக்திகளுடனும் எமது நட்ப்பு முரண்பாட்டை தெளிவுப்படுத்திக் கொண்டு, போராட்டக்களச் செயற்பாடுகளிலும், வெளிநாடுகளில் தமிழீழ ஆதரவை வளர்ப்பதிலும் நாம் ஈடுபடவேண்டும். *பொது எதிரியை தோற்கடிப்பது தேசிய விடுதலைப் போராட்டத்தை வளர்ப்பது, புதிய சனநாயக அரசியலை திடப்படுத்துவது* இந்தக் குறிக்கோளில் நாம் தெளிவாகவும் உறுதியாகவும் இருக்கவேண்டும். இதைநாம் தமிழீழ ஆதரவாளர்களுக்கு எடுத்துரைக்க வேண்டும்.

## தமிழீழ ஆதரவில் தமிழக - கர்நாடக மக்கள்

தமிழீழப் போராட்டத்துக்கான சர்வதேச ஆதரவை, முக்கியமாக போராட்டத்தின் தொடக்க காலங்களில் கொந்தளித்துக் கொண்டிருந்த தமிழ்நாட்டு தமிழர்களின் ஆதரவை, சரியான முறையில் வளர்த்தெடுப்பதில் போராளி இயக்கங்கள். *அரசு ஆதரவா ? மக்கள் ஆதரவா ? முக்கியம்* என்பதில் அரசின் அரவனைப்பை பெறுவதில் காட்டிய அக்கறை அதிகம். ஆனால் இந்திய மத்திய - மாநில அரசுகள் தங்கள் வெளியுறவு நலன்களுக்கு முக்கியத்துவம் அளித்து சிறிலங்கா அரசின் பக்கம் கூட்டுச் சேர்ந்தபோது, தமிழக மக்களின், தமிழீழ ஆதரவையும் *'தடை'* போட்டு தடுத்தன. தமிழீழப் போராளிகளும் முன்னர் மக்கள் ஆதரவுக்கு முன்னுரிமை அளிக்கத் தவறியதால் நிர்க்கதியான நிலைக்குள்ளாகினர், *போராளிகளுக்கும் - தமிழக மக்களுக்கும், தமிழீழ அகதிகளுக்கும் - தமிழக மக்களுக்கும்* இடையிலான உறவை சீர்குலைப்பதிலும், எதிர் எதிராக முன்னிறுத்துவதிலும், மக்களின் எதிரிகள் குறிப்பிட்டளவு வெற்றிபெற்றார்கள். தமிழக - கர்நாடக புரட்சிகர சனநயாக சக்திகளும் தமிழ் மொழி உணர்வாளர்களும் தமிழீழ ஆதரவு நடவடிக்கைகளில் ஈடுபட்ட வேளை 'தடாச்'சட்டத்தில் கைது, சிறை என தமிழீழ ஆதரவு எழுச்சிப் போராட்டங்களை 'தடை' செய்தன இந்திய மத்திய - மாநில அரசுகள்.

தமிழ்நாட்டின் சிதம்பரத்தில் நடை பெறும் இந்த *ஈழத்தமிழர் ஆதரவு எழுச்சி மாநாடும்,* கடந்த ஆண்டு மே மாதம் கலைஞர் அரசால் 'தடை' செய்யப்பட்டது. தடையை எதிர்த்து வழக்கு தொடுத்து, இன்று *தடை உடைத்து, மீண்டும் எழுச்சி மாநாடு நடக்கிறது.*



"தமிழீழ விடுதலை ஆதரவாளர் ஒருங்கிணைப்பு குழுவால்" நடத்தப்படுகின்ற இவ்எழுச்சி மாநாடு, "ஈழத்தமிழர் ஆதரவு எழுச்சி மாநாடு" என அறிவித்திருக்கிறது. *தமிழீழ விடுதலை ஆதரவு எழுச்சி அல்லது தமிழீழ மக்கள் ஆதரவு எழுச்சி எனக் குறிப்பிடவில்லை.*

## தமிழீழ முசுலிம்களின் எதிர்காலம்

சிறீலங்கா அரசின் சிங்கள இனவாத பௌத்த மதவாத ஒடுக்குமுறைக்கு எதிராக போராடுகின்ற புலிகள் இயக்கம், 1991இல் வடக்குத்தமிழீழத்தில் இருந்து தமிழ் முசுலீம் மக்களை வெளியேற்றியது அகதிகளாக்கியது, இன்றுவரை முசுலிம் மக்களை அவர்களது தாய்மண்ணில் மீளக்குடியமர்த்துவது பற்றியும் தமது தவறுகுறித்தும் புலிகள் இயக்கம் வாய்திறக்கவில்லை. தமிழீழம், தமிழீழ அரசு என்ற இலட்சியத்தை புலிகள் உறுதியாக பின்பற்றினாலும், *தமிழீழத்தின் குடிமக்கள் தமிழ் முசுலீம்கள் என்ற அடிப்படை உரிமையை* சாதுரியமாக புறக்கணித்து வருகிறார்கள். இப்போது தமிழீழத்தின் குடிமக்கள், தமிழ் இந்துக்களும், தமிழ்க் கிறிஸ்தவர்களும் மட்டுமே என்ற கண்ணோட்டத்தில் எல்லாம் அனுகப்பட்டுவருகிறது.

தமிழீழ மக்களின் தேசிய விடுதலைப் போராட்டத்தை உடைக்க, பலவீனப்படுத்த சிறீலங்கா அரசும், இஸ்ரேல் உட்பட அன்னிய அரசுகளும் தமிழ் முசுலிம் மக்களை, தமிழீழ தேசிய விடுதலைப் போராட்டத்தில் இருந்து பிரிக்க பல சூழ்ச்சிகளை அரங்கேற்றி வந்தனர், அதற்கு அரசு சார்பு முசுலீம் குழுக்களை பயன்படுத்தின.

ஆனால் புலிகளே, முசுலீம் மக்களை தாய் மண்ணில் இருந்து வெறியேற்றி அகதிகளாக்கியதுடன், எதிரிகளின் சூழ்ச்சிக்கு இறுதிவடிவம் கொடுத்தனர். தமிழீழ தேசியவிடுதலைப் போராட்டத்தை, புரட்சிகர பாதையில், புரட்சிகர கட்சியின் தலைமையில் முன்னேடுக்க வேண்டும். எனக்கூறும் கட்சி புதிய கருத்துருவாக்கம் ஒன்றைமுன்தள்ளியுள்ளது. தமிழீழ தேசிய விடுதலைப் போராட்டத்தை - யுத்தத்தை ஒருபுறம் பலயீனப்படுத்தியுள்ள, முசுலீம் மக்கள் மீதான புலிகளின் தவறான அராஜகக் கண்ணோட்டத்தை, அனுகுமுறையை கைவிடக் கோரவேண்டிய, நிர்ப்பந்தம் கொடுக்கவேண்டிய வேளையில், புரட்சிகர மக்கள் கட்சி, தானே முன்னின்று தமிழீழ தேசிய விடுதலைப் போராட்டத்தில் முசுலீம் மக்களை அரசியல் சமத்துவத்துடன் அய்க்கியப் படுத்தி, தமிழீழ தேசிய விடுதலை இயக்கத்தை பலப்படுத்துவதற்குப் பதிலாக, பொது எதிரிகளை, அவர்களின் கோட்பாட்டு சூழ்ச்சிகளை முறியடிப்பதற்கு பதிலாக *"முசுலீம் மக்களை தனி ஒரு தேசமாக"* அடையாளப்படுத்திவருகிறது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தேசிய இனங்களின், தேசிய அரசு அமைப்பதற்கான, தேசிய விடுதலைப் போராட்டங்களில், ஒரு தேசிய இனத்தில் இருக்கும் மத வேறுபாடுகளை, சாதிவேறுபாடுகளை, பிரதேச வேறுபாடுகளை, ஆண் பெண் வேறுபாடுகளை ஒரு புரட்சிகர மக்கள் இயக்கம், அரசியல் அதிகார சமத்துவத்துடன், அவ்ஆதிக்க அகவேறுபாடுகளை சனநாயக முறையில் க்குவதற்கான வேலைத்திட்டத்துடன் செயற்படும் அதேவேளை, தேசிய இனவிடுதலை வேண்டிநிற்கும் அனைத்து சக்திகளையும் தேசியவிடுதலை அரசியலில் அய்க்கியப்படுத்திக் கொள்ளவேண்டும். புதிய சனநாயக வேலைத்திட்டதின் ஒருபகுதி இது இப்படிச் செய்யத்தவறினால் இன ஒடுக்குமுறை அரசுகளும், ஏகாதிபத்தியங்களும், தங்களின் ஏகபோக அரசு அதிகாரத்தையும் தேசிய ஒடுக்குமுறையையும், உடைத்து எறியும் வல்லமை பெற்ற, *புரட்சிகர தேசிய அரசுகளை நிறுவும் சக்தியுள்ள தேசிய இனங்களை* அவர்களின் போராட்டங்களை - விடுதலை யுத்தங்களை பிளக்க, பலயீனப்படுத்தி அழிக்க அல்லது நசுக்கி ஏகாதிபத்திய முறைக்கு இசைவான நவகொலனிய புதிய தேசிய அரசுகளை உருவாக்க முயல்கின்றன. தேசிய இனத்தின் உள்ளே உள்ள மத, சாதி, பிரதேச, வேறுபாடுகளை பயன்படுத்தி *“அரசியல்சமூகம்"* *“தேசம்"* என்ற கோட்பாடுகளை முன்தள்ளி, தேசிய விடுதலை இயக்கத்தை உடைக்க முயல்கின்றன. அத்தகைய ஒரு *“நவீன தேசக் கோட்பாடு"* உலகம் முழுவதும் முன்தள்ளப் படுகிறது. ஒவ்வொரு தேசிய இனத்திலும் உள்ளே உள்ள குறுகியநோக்கம் கொண்ட தங்கள் சாதி, மதம், பிரதேசம் என்ற எல்லைக்குள் நிற்கும், அதிகாரத்துக்காக தவம் கிடக்கும் குட்டி முதலாளிய. சக்திகள் இக்கோட்பாடுகளுக்கு இரையாக்கப்படுகிறார்கள்.

தமிழீழத்தின் குடிமக்களாக, தமிழ் முசுலீம்கள், தமிழ் இந்துக்கள் தமிழ் கிறிஸ்தவர்கள் என தேசிய இனமாக பார்க்கப்படுகின்ற நிலையை மாற்றி *“தமிழ் முசுலீம்களுக்கு தனியான தேசம்"* *“மலைய மக்களுக்கு தனியானதேசம்"* பற்றிப் பேசப்படுகிறது தமிழீழ இலட்சியம், தமிழீழ தேசியவிடுதலை என இலட்சிய வார்த்தைகளை கைவிடாமல் அதை வேளை *“தமிழ் இந்துக்களும், தமிழ்க் கிறிஸ்தவர்களும்" தான் ஈழத்தமிழர்களாக காட்டப்படுகிறது.*

## எழுச்சி மாநாட்டை நோக்கி நாங்கள் கோருவது

தமிழீழ விடுதலை ஆதரவாளர் ஒருங்கிணைப்புக்குழு உணர்வுபூர்வமாக இதைப் புரிந்து கொண்டே *ஈழத்தமிழர் ஆதரவு எழுச்சி மாநாடு* எனத்தீர்மானித்திருக்கமாட்டார்கள் என நம்புகிறோம்.



இதை தமிழீழ விடுதலை ஆதரவாளர் ஒருங்கிணைப்புக்குழு தெளிவுபடுத்திக் கொள்வது நல்லது. தமிழீழ விடுதலைக்கு ஆதரவான போராட்டங்களை தொடர்ந்து வளர்த்தெடுத்துச் செல்வதற்கும், தமிழ் நாட்டில், கர்நாடகாவிலுள்ள தமிழீழ ஆதரவுச் சக்திகளை குறைந்தபட்சம் ஒரு பொது திட்டத்தின் கீழ் கொண்டு வரவும், இது பயனுள்ளதாக இருக்கும்.

**இந்த ஈழத்தமிழர் ஆதரவு எழுச்சி மாநாடு, தமிழ்நாட்டிலுள்ள தமிழீழ அகதிகள் *அகதி அந்தஸ்து* கூட இல்லாமல் இருப்பது பற்றியும், அகதிகளின் குறைந்த பட்ச வாழ்நிலைப் பிரச்சனைகளை கண்டறிந்து அவுற்றை தீர்க்க, இந்திய மத்திய மாநில அரசுகளை நிர்ப்பந்தப் படுத்த வேண்டும். தமிழீழப் போராட்டத்தை அங்கீகரிக்க வேண்டும், புலிகள் மீதான தடையை க்கவேண்டும் என இந்திய அரசை நிர்பந்திக்க வேண்டும்.**

தமிழீழப் போராட்டத்தையும், புலிகள் இயக்கத்தையும் நசுக்கி அழிக்கமுற்படும் உலகப்பொது எதிரிகளை எதிர்த்து, புலிகள் இயக்கம் தொடர்ந்து முன்னேற வேண்டும். தேசிய விடுதலை யுத்தம் வளரவேண்டும். எனில் தமிழீழப் போராட்டக்களம் அகத்தில் சனநாயகப்படுத்தப்பட வேண்டியது நிபந்தனையாகவுள்ளது. தேசியவிடுதலை அரசியலில், தமிழீழ இலட்சியத்தில் உறுதியாக நிற்கின்ற அரசியல் சக்திகள் சுதந்திரமாக, தனி அமைப்பாக செயற்படுவதையும், சிறீலங்கா அரசுக்கு எதிராக ஆயுதம் ஏந்திப் போராடுவதையும், புலிகள் வெளிப்படையாக அங்கீகரிக்க வேண்டும், வடக்கில் இருந்து வெளியேற்றப்பட்ட முசுலீம் மக்களை அவர்களது பாரம்பரிய இருப்பிடத்தில் குடியமரவைக்க புலிகள் வெளிப்படையாக உத்தரவாதம் அளிக்க வேண்டும் எனவும் இந்த மாநாடு தீர்மானங்களை நிறை வேற்றி செயற்படுத்தும் எனவும் எதிர்பார்க்கிறோம்.

தேசபத்தன் ஆதரவுக்குழு (இந்தியா)

**தமிழீழ புதிய சனநாயக கட்சி**

**N D P T**

தொடர்பு முகவரி:
Mr. AMEEN, POST BOX 256,
NYBORG 5871, NORWAY
email: patriot_editor@yahoo.com

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்